
SAINT
JULIA

## *புனித ஜீலியா*

கார்த்தேஜ் நகரை பாரசீகர்கள் பிடித்த போது அவிசுவாசியான ஒரு வியாபாரிக்கு இவளை விற்றார்கள். இவள் தன் கடமைகளை பிரமாணிக்கத்துடன் செய்து புண்ணிய வாழ்வு நடத்தினாள். எஜமான் இவளை அன்பாக நடத்தி வந்தான். இவளை அழைத்துக் கொண்டு ஒரு முறை அவன் கோர்சிகா என்னுமிடத்துக்குச் சென்றான். அங்கு நடந்த அஞ்ஞான விழாவில் இவள் பங்கு பெற மறுத்தாள். ஆளுநன் அவளது மனதை மாற்ற முயன்றும் முடியவில்லை. “நான்கு சிறந்த அடிமைப் பெண்களை உனக்குத் தருகிறேன். இவளை எக்குக் கொடுத்து விடு” என்று ஆளுநன் கேட்டான். எஜமான் மறுத்தான். தெய்வங்களுக்கு பலியிடுவாயானால் இவளுக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதாக ஆளுநன் வாக்களித்தான். இவள் இணங்கவில்லை. எனவே வேதத்துக்காக கொல்லப்பட்டாள்.

**சிந்தனை:**

உலக எஜமானரை விட கடவுளை அதிகமாக நேசிப்போம்.

**செபம்:**

இயேசுவே, நாங்கள் பிரமாணிக்கமாய் எங்கள் கடமைகளைச் செய்யும் வரம் தாரும்.